


ரகசியம்

சின்ன வயசில் நானும் என் தங்கை வத்ஸலாவும் வைத்தி மாமாவை ரொம்பக் கொடுமை பண்ணியிருக்கிறோம். வைத்தி மாமா எப்படி எங்கள் குடும்பத்துடன் ஒட்டிக்கொண்டார் என்பது தெரியாது. உறவுகூட இல்லை. அப்படிப்பட்டவர் எப்படிச் சுதந்திரமாக மாடியில் சின்னதாகப் பெட்டி படுக்கை வைத்துக்கொண்டு பத்துப் பேர் குளிக்க வேண்டிய பாத்ரூமில் 'அட்ஜெஸ்ட்' பண்ணிக்கொண்டு . . . இதெல்லாம் அந்த நாள்களில்தான் சாத்தியம். இப்போதெல்லாம் சொந்தத் தம்பி வந்தாலே ஓட்டலில் தங்குகிறான்.

வைத்தி மாமா. ஆர். எம். எஸ் ஸில் மெயில் ஸார்ட்டராக வேலை செய்து வந்தார். வாரம் இருமுறை 'டுட்டுக்கோரின் எக்ஸ்பிரஸ்'ஸில் மெட்ராஸ் போய்விட்டு வருவார். ஒருமுறை அவசரத்துக்கு என்னையும் வத்ஸலாவையும் ஆர்.எம்.எஸ். வண்டியில் மறைத்து வைத்து மெட்ராஸ் அழைத்துச் சென்றது ஞாபகம் உள்ளது. பெரிய பெரிய தபால்

பைகளுக்கிடையில் ஒரு மாதிரி வாசனையாகப் பிரயாணம் செய்தோம்.

அவரை ரொம்பப் பாடாய்ப் படுத்தியிருக்கிறோம். அதுவும் வத்ஸலா பயங்கரமாகக் கலாட்டா பண்ணுவாள். சுபாவமாகவே அவருக்கு உடம்பில் கூச்சம் உண்டு. எந்த இடத்தில் தொட்டாலும் எகிறிக் குதிப்பார். அவர் சாப்பிட்டுவிட்டு 'ஹாயாக' ஃபேன் அடியில் வெறும் உடம்பில் படுத்திருக்கும்போது வத்ஸலா நைஸாகப் பின்னால் அணுகி விளக்குமாற்றுக் குச்சியின் நுனியில் இருக்கும் லேசான இறகினால் மெல்ல முதுகில் வருடுவாள். அப்படியே விட்டம் வரை எகிறிக் குதித்துக் தூக்கிவாரிப் போட்டு வேட்டி கலைய விழுந்தாலும் கோபமே வராது.

"வேணாம்மா குழந்தை" என்றுதான் சொல்வார். ஒருவித முகஞ் சுளிப்பும் கிடையாது. அவருக்குக் கோபம் வந்து நான் பார்த்ததில்லை. படுக்கைக்கு அடியில் பாறாங்கல் எல்லாம் வைப்போம். மருதூருக்கு ஒருமுறை லாரியில் போனபோது ஜிப்பாவுக்குள் மணல் போட்டிருக் கிறோம். அப்புறம் ரோடுக்குத் தார் போடுவார்களே, அதைப் பந்தாக உருட்டி உட்காரும் இடத்தில் வைத்துவிட்டு மறைந்து நோக்கியுள்ளோம். நாற்காலியிலிருந்து எழுந்து என்ன 'பிசுபிசு' என்கிறதே என்று ஆர்வத்துடன் சோதிப்பாரே தவிர, தனிமையில்கூட முகஞ்சுளிப்புக் கிடையாது.

ஏனோ அவரைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை. காரணம் எதிர்ப்பே இல்லாமல் எப்போதும் சிரித்துக்கொண்டிருந்ததோ, இல்லை லேடிஸ் சைக்கிள் வைத்துக்கொண்டிருந்தாரே அதனாலோ, இல்லை வீட்டுப் பெண்களுடன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தாரே அதனாலோ? அவரைச் சந்தர்ப்பம் கிட்டியபோதெல்லாம் அசௌகரியம் பண்ண வேண்டும் என்ற கடும் ஆசை எனக்கு இருந்தது.

அம்பது வயசுக்கு அழகாகவே டிரஸ் பண்ணிக்கொண்டு இருப்பார். டாக்கா மஸ்லின் ஜிப்பா போட்டுக்கொண்டு புருவத்தில் புனுகு தடவிக்கொண்டு பளபளவென்று வினோலியா ஸ்னோ. தங்கம் கலந்த பற்கள், குரல் சன்னமாக இருக்கும். பாடுவார். கர்நாடக சங்கீதம் 'தியரி' நன்றாகவே தெரியும். சுத்த மத்யமம், ப்ரதி மத்யமம், மகா வைத்தியநாதையர் என்றெல்லாம் பேசுவார். கனகாங்கி, ரத்னாங்கி என்று வினோத ராகங்களில் எல்லாம் பாடிக்காட்டுவார்.

ஒவ்வொருமுறையும் டேட்டி முடிந்து சென்னையிலிருந்து வரும்போது பசும் நெய், ஊதுவத்தி பாக்கெட், அம்மாமி அப்பளம் என்று வாங்கி வருவார். எப்போது கேட்டாலும் பேனா தருவார். இருந்தாலும் வத்ஸலாவுக்கும் எனக்கும் அவரைப் பிடித்ததே இல்லை. ஏதாவது ஒரு விதத்தில் அவரைக் கோபிக்க வைக்க வேண்டும் என்று முயற்சிகள் செய்துகொண்டே இருந்தோம்.

அவர் குடும்பத்தைப் பற்றி ஏதும் தெரியாது. திருவையாற்றில் தம்பியோ யாரோ இருந்ததாகச் சொல்வார்கள். கல்யாணம்

ஆகவில்லை என்றுதான் தெரிந்தது. யாரோ ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்து கடைசி நிமிஷத்தில் கொஞ்சம் பணக்கார மாப்பிள்ளை கிடைக்க நிச்சயதார்த்தம் எல்லாம் ஆகியும் கல்யாணம் கான்ஸல் ஆகிவிட்டதாம். அதற்கப்புறம் இவர் கல்யாணம் செய்துகொள்ளவில்லையாம். அதெல்லாம் பரவாயில்லை. இருந்தாலும் இந்த மாதிரிக் குழைய வேண்டாம் என்று தோன்றியது. எனக்கு அவரிடம் எந்தவிதப் பச்சாதாபமும் ஏற்படவில்லை.

ஒரு தீபாவளியின்போது நான் செய்தது ரொம்ப அக்கிரமம். அவர் காலையில் கொல்லைப்புறம் போயிருந்தபோது அஸ்பெஸ்டாஸ் இடுக்கின் வழியாகப் பெரிய லட்சுமி வெடியை உள்ளே பற்றவைத்துச் செலுத்திவிட்டேன். அது உள்ளே டம்மென்று எதிரொலியுடன் கேட்கக் கூரையெல்லாம் நியூஸ் பேப்பர் பறந்தது. கொஞ்ச நேரம் கழித்து வைத்தி மாமா வெளிப்பட்டபோது ஒரு வார்த்தை புகார் இல்லை. கலங்கிப்போய் ஒரு மாதிரி சைடு அடித்துக்கொண்டு நடந்து அருணாசல டாக்டரிடம் போய் மருந்து போட்டுக் கொண்டாரே தவிர, யாரையும் திட்டவில்லை. எனக்கு ஒரு மாதிரிப் பரிதாபமாக இருந்தது. என்னை மத்தியானம் பார்த்தபோது சிரித்தார்.

இப்படிப்பட்ட பரமசாதுவை நிசமாகவே கோபித்துக்கொள்ள வைக்கும் பொருளைத் தற்செயலாகத்தான் கண்டுபிடித்தோம்.

கொஞ்ச நாள்களாகவே அவருடைய அலமாரியின் மேல் தட்டில் அந்தப் பெட்டி இருந்தது. நாங்கள் சரியாகக் கவனிக்காததால் அதைக் குடையவில்லை. வைத்தி மாமா, சாமான்களை அலமாரியில் வைத்துக்கொண்டிருக்கும் பாங்கே நேர்த்தி. நியூஸ் பேப்பர் அடிவாரம் போட்டுப் பாச்சை உருண்டை எல்லாம் வைத்துத் துணிகளைத் துல்லியமாகச் சலவைசெய்து சுத்தமாக மடித்து வைத்திருப்பார். அப்புறம் டயரி, இங்கி புட்டி சமாச்சாரங்கள், செண்டு பாட்டில் ஸ்நோ பவுடர், கணக்கு நோட்டு.

எத்தனை முறை நானும் வத்ஸலாவும் கலைத்தாலும் சளைக்காமல் திருப்பி அடுக்கிவிடுவார். கலைப்பதில் சுவாரஸ்யம் குலைந்து ஸ்டூல் போட்டு மேல் தட்டைப் பார்த்தபோதுதான் அந்தப் பெட்டி தெரிந்தது. வைத்தி மாமா ஒரு விஷயத்தைப் பூட்டி வைத்திருப்பதே எங்களுக்கு ஆர்வத்தைத் தந்தது. "பூட்டியிருக்கே?" என்றாள் வத்ஸலா.

"உடைச்சுட்டாப் போறது, இல்லை, கள்ளச்சாவி போட்டுத் திறந்து பார்க்கலாம்."

"இன்னிக்குப் பூனை டூட்டிக்கு போறதில்லை, ராத்திரி நிதானமாப் பாத்துரலாம்" என்றாள்.

பூனை என எப்படிப் பெயர் வைத்தோம் என்று ஞாபகமில்லை. தெற்கு வாசல் கடையொன்றில் புனுகுப் பூனை உலவும். புனுகு ஜவ்வாது போன்ற ஷோக் சமாச்சாரங்கள் உபயோகிப்பதால் இருக்கலாம்.

பூனை அன்று வழக்கம்போல ராயர் மாமி கொண்டுவந்த காரியர் சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு டார்ச்சு லைட்டும் மப்ளருமாக எட்டு மணி லோக்கலைப் பிடிக்கக் கிளம்பின கையுடன் நாங்கள் அந்தப் பெட்டியைக் குடைந்திருக்கக்கூடாது. ஏதோ காரணமாகத் திரும்பி வந்துவிட்டார். வெளிச்சத்தின் கீழ் அதை நெம்பத் தயாராக இருந்த எங்கள் இருவரையும் பெட்டியையும் பார்த்து முதல் முறையாக வைத்தி மாமா கோபித்துக்கொண்டார்.

மூஞ்சியெல்லாம் ஜிவ்வென்று ரத்தம் பாய்ந்துவிட்டது. "ச்சே, நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். உங்க மாதிரி விஷமக் குழந்தைகளைப் பார்த்ததில்லை. ஒரு மனுஷனுக்குப் ப்ரைவஸிங்கறது கொஞ்சமாவது வேண்டாமா? பாவநாசத்துக்குப் போன் பண்ணிச் சொல்ல எத்தனை தேசாலம் ஆகும்? உங்கப்பா எப்பேர்பட்டவர்? அவருக்கு இதையெல்லாம் கேக்கறதுக்குப் பிடிக்குமா? அவருக்குப் போய் இப்படி வாலா பொறந்து வெச்சிருக்கிங்களே? வத்ஸலா நீ பொம்மனாட்டியில்லையா?" என்றெல்லாம் கோர்வையில்லாமல் திட்டினார். முரட்டுத்தனமாகப் பெட்டியைப் பிடுங்கிக்கொண்டார். கண்கள் கலங்கியிருந்தன. "இன்னம் ஒரு தடவை இந்த மாதிரி குடைஞ்சேன்னு தெரிஞ்சுது?" என்று புஸ் என்று துருத்திபோல மூச்சுவிட்டுவிட்டு அலமாரியின் மேல் தட்டில் அந்தப் பெட்டியைத் திரும்ப வைத்துவிட்டு என்றைக்கும் இல்லாமல் அலமாரியையும் கெட்டியாகப் பூட்டிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்.

"அந்தப் பொட்டிக்குள்ள என்னவோ இருக்கு சூட்சுமம்!"

"நோட்டு வெச்சிருக்கும் இல்லை, வைரம் கிய்ரம்?"

"அப்பாகிட்ட சொல்லிடுவேங்கறதேடா!"

"சேசே அதுக்கெல்லாம் தைரியம் கிடையாது. சும்மா பயமுறுத்தறது, தெண்டச் சோறு."

அந்த மவுன யுத்தம் அன்றிலிருந்து தொடங்கியது. அவர் இல்லாத போது பூட்டை நெம்பிப் பார்க்க, உடனே பூனை தாழ்ப்பாளுக்கு ரெண்டு பூட்டுப் போட்டுவிட்டது. அதில் சவால் அதிகமாகிவிட்டது. ராத்திரி என்னைத் தனியாகக் கூப்பிட்டுச் சமாதான உடன்படிக்கை செய்து பார்த்தது. "ஏண்டா, சொன்ன பேச்சு கேக்கமாட்டியா? அலமாரியை எதுக்காகடா குடையர? அதில ஒண்ணும் இல்லேடா. என்னடா வேணும் உனக்கு?"

"சேசே! மாமா அன்னிக்கு நீங்க சொன்னப்புறம் அதுகிட்டயே போகலை" என்றேன்.

"த பாரு டம்பளர் லாக்கு. அதை உன்னால திறக்க முடியாது."

"யார் மாமா திறந்தா?" என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன். திறக்கும் வைராக்கியம் அதிகமாகிவிட்டது. அவர் டூட்டிக்குப் போயிருந்தபோது என் தச்சு வேலை நண்பன் சின்னராசு விடம் காட்டியபோது "இந்தப் பூட்டெல்லாம் எனக்குத் திறக்கத்

தெரியாது" என்றான். "வேணும்னா பூட்டைத் தொடாமத் திறக்கலாம். திருப்புளி இருக்குதா?"

"எதுக்கு?"

"பூட்டு ஸ்ட்ராங்காத்தான் இருக்கு. ஆனா, தாப்பா உட்ஸ்க்ருதான் போட்டிருக்கு. தாப்பாளைச் சுலபமாத் திருப்புளியால திறந்துறலாம்" என்று யோசனை சொன்னான்.

"அட, இது எனக்குத் தோணலே பாத்தியா?" என்று வியந்தேன்.

இப்போது திட்டமிட்டுச் செய்தோம். பூனை மெட்ராஸுக்கு டூட்டிக்குப் போயிருக்கும் நாளாகச் தேர்ந்தெடுத்தோம். சின்னராசு விடமிருந்து சரியான சைஸ் திருப்புளி வாங்கிவந்து நானும் வத்ஸலாவும் கஷ்டப்பட்டு அலமாரியைத் திறந்துவிட்டோம். மேல் தட்டில் அந்தச் சின்னப் பெட்டி பத்திரமாக இருந்தது. அதைப் பூட்டியிருந்த டைகர் லாக் ஒரு பொருட்டாக இல்லை. அதன் மூக்கை நெம்பினதில் வாயைப் பிளந்துவிட்டது. "திற திற! உள்ளுக்குள்ள என்னதான் வெச்சிண்டிருக்கு பார்த்துரலாம்!"

"இர்றி! அவசரமே இல்லை. நிதானமாகப் பார்க்கலாம். நீ போய்க் கதவைத் தாப்பா போட்டுண்டு வந்துரு."

சுமார் எட்டு அங்குலத்துக்கு ஆறு அங்குலம் இருந்த சிறிய பெட்டிதான். அதைத் திறந்ததும் உள்ளே நீல நிறத்தில் வெல்வெட் போல் துணி மூடியிருந்தது. "மொள்ள, மொள்ள. ஏதாவது வைரம் கிய்ரம் விழுந்துறப் போறது." வைரமுமில்லை ஒன்றுமில்லை. நீலத் துணியின் நடுவில் ஒரு பேப்பர் பொட்டலம் சுருட்டி வைக்கப் பட்டிருந்தது. அதைப் பிரித்ததில்,

உள்ளே லேஸ் காகிதம் இருந்தது. அதையும் பிரித்ததில்,

"அட சட்" என்றேன்.

"என்னடா?"

காய்ந்த பூ! பாடம் பண்ணினாற் போல. தொட்டால் பொடிப் பொடியாக உதிர்ந்துவிடும்படியாக!

"காஞ்ச பூ! அப்புறம் இது என்ன?"

"தலைமயிர்!" நானும் வத்ஸலாவும் ஏமாற்றத்துடன் அந்த நீண்ட ஒற்றைத் தலைமயிரைப் பார்த்துவிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டோம். முடி, காய்ந்த மலர். வேறு ஒன்றும் அந்தப் பெட்டியில் இல்லை. புரியவே இல்லை. பேசாமல் அவருடைய பொக்கிஷத்தை முன்பிருந்தவாறே பத்திரமாக எடுத்து வைத்துவிட்டு மறுபடி பூட்டி அலமாரியையும் திருகிவிட்டு நலுங்காமல் வந்து விட்டோம். அதற்கப்புறம் வைத்தி மாமாவைக் கலாட்டா பண்ணுவதை அறவே நிறுத்திவிட்டோம்.

1984